29-10-2023 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 27.02.1996

## உண்மையின் அஸ்திவாரம் தூய்மை மேலும் அதன் அடையாளம் - நடத்தை மற்றும் முகத்தில் தெய்வீகத் தன்மை

இன்று உண்மையான தந்தை, உண்மையான ஆசிரியர், உண்மையான குரு தனது நாலா பக்கத் திலுமுள்ள சத்யத் தன்மையின் சக்தி சொரூபத்தில் இருக்கும் குழந்தைகளை பார்த்துக் கொண்டி ருக்கிறார். சத்யத் தன்மையின் அஸ்திவாரம் தூய்மையாகும். மேலும் சத்யத்தன்மையின் நடை முறை நிரூபணம் முகம் மற்றும் நடத்தையில் தென்படும். உலகத்தில் பலவிதமான ஆத்மாக்கள் தன்னை சத்யவான் என்று சொல்லிக் கொள்கிறார்கள். மற்றும் அவ்வாறே புரிந்து கொள்கிறார்கள். ஆனால் சம்பூரண சத்தியம் என்பது தூய்மையின் ஆதாரத்தில் இருக்கிறது. தூய்மை இல்லை யென்றால் சதா சத்தியத்தன்மையில் இருக்க முடியாது. எனவே உங்களுடைய அஸ்திவாரம் என்னவாக இருக்கிறது? தூய்மை. எனவே தூய்மையின் ஆதாரத்தில் சத்தியத்தின் சொரூபம் இயல்பாக மற்றும் எளிதாக எப்பொழுதும் இருக்கும். சத்தியத்தன்மை என்பது உண்மை பேசுவ தினாலும், உண்மையை மட்டும் செய்வதினாலும் மட்டும் என்று சொல்ல முடியாது. ஆனால் அனைத்தையும் விட முதன்மையான சத்யத்தன்மை என்பது அதன் மூலம் உங்களுக்கு தூய்மை மற்றும் சத்தியத்தின் சக்தி வந்துவிடும். எனவே முதலாவது விஷயம் தனது சத்திய சொரூபத்தை தெரிந்துக் கொள்வதாகும். நான் ஆத்மா என்ற சத்ய சொரூபத்தை முதலில் தெரிந்திருக்கவில்லை. ஆனால் முதலாவது சத்தியம் தனது சொரூபத்தை தெரிந்துக் கொள்வது. நான் இன்னாராக இருக்கிறேன், இவ்வாறாக இருக்கிறேன் என்பது போன்ற உடல் ரீதியான கணக்கில் பார்த்தால், இது தான் சத்தியமானதாக இருந்தது? சத்ய சொரூபம் என்பது முதலில் சுயத்தின் சொரூபம் மற்றும் பாபாவின் உண்மையான அறிமுகத்தை தெரிந்துக் கொள்வது. நல்ல முறையில் தனது சத்ய சொரூபம் மற்றும் பாபாவின் சத்ய சொரூபத்தை தெரிந்துக் கொண்டீர்களா? மூன்றாவது விஷயம் - இந்த சிருஷ்டி சக்கரத்தையும் உண்மையான சொரூபத்தில் தெரிந்துக் கொள்வது. இந்த சக்கரம் என்னவாக இருக்கிறது மேலும் இந்த நாடகத்தில் எனது நடிப்பு என்னவாக இருக்கிறது. எனவே தனது நடிப்பை நல்ல முறையில் தெளிவான ரூபத்தில் தெரிந்துக் கொண்டீர்களா? உங்களுடைய நடிப்பு நன்றாக இருக்கிறதல்லவா? அனைத்தையும் விட நல்ல நடிப்பு இந்த சங்கம யுகத்தினுடையதாக இருக்கிறது. ஆனால் உங்களுடைய தேவ நிலையில் இருக்கும் ஆத்மாவின் நடிப்பும் கூட உலகத்தில் முழு சக்கரத்தில் இருக்கும் ஆத்மாக்களை விட உயர்ந்ததாக இருக்கும். தர்ம ஆத்மாக்களாக இருந்தாலும் சரி, மகான் ஆத்மாக்களின் நடிப்பை நடித்தாலும் கூட அந்த ஆத்மாக்களின் உடல் மற்றும் ஆத்மா இரண்டுமே தூய்மையான நிலையில் இல்லை. மேலும் தேவ ஆத்மாக்களின் உடல் மற்றும் ஆத்மா இரண்டுமே தூய்மையானதாக இருக்கிறது. அவ்வாறு முழு கல்பத்தில் வேறு எந்தவொரு ஆத்மாவும் இருப்பதில்லை. எனவே தூய்மையின் ஆஸ்தி வாரத்தில் உங்களைத் தவிர வேறு எந்தவொரு ஆத்மாவும் உயர்ந்தவர்கள் கிடையாது. உங்களுக்கு தேவநிலையின் நடிப்பு நினைவில் இருக்கிறதா? பாண்டவர்களுக்கு நினைவு இருக்கிறதா? தேவ ஆத்மாக்களின் தூய்மை

இயல்பானதான ரூபத்தில் இருந்துக் கொண்டி ருக்கிறது. மகான் ஆத்மாக்கள், ஆத்மாக்களை தூய்மையாக்குகிறார்கள், ஆனால் மிகவும் முயற்சி செய்து, இயல்பாக இல்லை. இயற்க்கையாகவோ, இயல்பாக ரூபத்தில் இருப்பதில்லை. மேலும் உங்களுடைய அரைக்கல்பத்தின் தூய்மையான வாழ்க்கை இயற்கையானதாகவும், இயல்பான தாகவும் இருக்கிறது, மேலும் எந்தவிதமான முயற்சியும் தேவைப்படுவதில்லை. இங்கு செய்யும் முயற்சி அங்கு இயல்பாகவே அமைந்திருக்கும். ஏனெனில் அங்கு தூய்மையற்றத் தன்மையின் பெயர் அடையாளமே இருக்காது. தூய்மையற்ற தன்மை என்ன என்பது தெரியாமல் இருந்தோம். ஆகையால் உங்களுடைய தூய்மையின் நடைமுறை சொரூபம் தேவதை அதாவது தெய்வீகத் தன்மையாகும். இந்த நேரத்தில் உலகத்தில் இருக்கக் கூடியவர்கள் எவ்வளவு தான் தன்னை சத்யவான் என்று புரிந்து கொள்ளட்டும், ஆனால் சுய சொரூபத்தின் சத்தியத் தன்மையை தெரிந்துக் கொள்ளவே இல்லை. பாபாவின் சத்ய சொரூபத்தையும் கூட தெரிந்துக் கொள்ளாமல் இருக்கிறார் கள். எனவே முழுமையாக சத்ய சொரூபம் என்று சொல்ல முடியாது. தன்னைப் பற்றிய மற்றும் பாபாவை பற்றிய சத்திய சொரூபத்தின் நினைவு இருக்கும் பொழுது தான் உங்களிடத்திலும் கூட சத்தியத்தின் சக்தி எப்பொழுதும் இருக்கும். அதனால் இயல்பாகவே ஒவ்வொரு எண்ணத்திலும் உங்களுக்குள் உண்மை தன்மை இருக்கும். இப்பொழுதும் எப்பொழுதாவது மறந்து விடுகிறீர்கள், உடல் உணர்வில் வந்து விடுகிறீர்கள், எனவே எண்ணத்திலும் சதா சத்யத்தன்மை சக்தி எவ்வளவு இருக்க வேண்டுமோ, தூய்மையின் சக்தி எவ்வளவு இருக்க வேண்டுமோ, அது இருக்காது. சதா வீணானது தான் இருக்கிறதா? எனவே வீணானதை உண்மைத் தன்மை என்று சொல்ல முடியுமா? பொய் பேசவில்லை, ஆனால் ஏன் சத்ய தன்மை இருப்பதில்லை? ஒருவேளை யாராவது தன்னை நான் ஒருபொழுதும் பொய்யே பேசுவது கிடையாது சதா உண்மையை தான் பேசுகிறேன் என்று புரிந்து கொண்டு அமர்ந்திருக்கிறார்கள் என்றால், எண்ணம், சொல், செயல், சம்மந்தம் மற்றும் தொடர்பு அனைத்திலும் தெய்வீகத் தன்மை அனுபவம் ஆகவேண்டும் என்பதே சத்தியத்தின் மதிப்பீடாகும். வார்த்தைகள் உண்மையாகத் தான் இருக்கிறது ஆனால் தெய்வீக தன்மையுடன் இருப்பதில்லை, நான் உண்மையைத் தான் பேசுகிறேன் நான் உண்மையைத் தான் பேசுகிறேன் என்று பல முறை சொல்வதை கேட்கிறோம் இல்லையா. நான் எப்பொழுதும் சத்தியமாக இருக்கிறேன் ஆனால் பேச்சில், செயலில் ஒருவேளை தெய்வீகத்தன்மை இல்லை யென்றால், மற்றவர்களுக்கு உங்களின் உண்மை, உண்மையாக தோன்றாது. இவர்கள் தன்மை நிரூபணம் செய்துக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் இவர்கள் உண்மையானவர்கள் என்று தோன்றவில்லை என்று தான் புரிந்து கொள்வார்கள். சத்யத்தை நிரூபணம் செய்ய அவசியமில்லை. ஒருவேளை தனது சத்தியத்தன்மயை பிடிவாதத்தோடு நிரூபணம் செய்கிறீர்கள் என்றால் அதில் தெய்வீகத் தன்மை தென்படுவதில்லை. இவ்வாறு செய்வது சாதாரணத்தன்மையாகும், உலகத்திலும் கூட இப்படித்தான் செய்கிறார்கள். மேலும் பாப்தாதா சத்தியத்திற்கான அடையாளம் ஒரு சுலோகனில் சொல்கிறார் - யார் உண்மையாக இருக்கிறார்களோ, அவர்கள் சாகாரத்தில் கூட தென்படுவார்கள். உண்மையானவர்கள் நடனமாடிக்கொண்டே இருப்பார்கள் சதா குஷியில் நடனமாடிக் கொண்டே இருங்கள். எப்பொழுது பிடிவாதத்தோடு நிரூபணம் செய்கிறார்கள் என்றால் அந்த நேரத்தில் தன்னையோ அல்லது மற்றவர்களின்

முகத்தை பார்த்தால் குஷி தென்படாது. சிறிதளவு கவலையும் கூட வருத்தத்தை கொண்டு வந்துவிடும். நடனமாட இயலாது. உண்மையாக இருந்தால் சதா நடனமாடிக் கொண்டே இருப்பார்கள். சதா குஷியில் நடனமாடுவார்கள். மகிழ்ச்சி யான வாழ்க்கை இரவும் பகலும் மிகவும் நன்றாக இருக்கும். மேலும் உண்மையில் சிறிதளவு பொய் கலந்துவிட்டால் அந்த நேரத்தில் வாழ்க்கை அந்தளவு நன்றாக இருக்காது. எனவே சத்தியத்தின் பொருள் சத்ய சொரூபத்தில் நிலைத்திருந்து எண்ணம், சொல், செயலை செயல்படுத்த வேண்டும்.

இன்றைய உலகத்தில் உண்மையாக நடப்பது மிகவும் கடினம் என்று மிக தெளிவாக சொல்கிறார்கள். பொய் பேச வேண்டியிருக்கிறது. ஆனால் பல நேரங்களில், பல பிரச்சனைகளில் பிராமண ஆத்மாக்களின் வாயிலிருந்து சொல்வதில்லை, ஆனால் சில இடங்களில் தந்திரமாக நடந்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என்று உள்ளுக்குள் புரிந்து கொள்கிறார்கள். அதை அவர்கள் பொய் என்று சொல்வதில்லை புத்திசாலித்தனம் என்று சொல்கிறார்கள். எனவே புத்திசாலித்தனம் என்றால் என்ன? இப்படியெல்லாம் செய்து தான் ஆக வேண்டியிருக்கிறது. எனவே உலகத்தினர் தெளிவாக சொல்கிறார்கள், பிராமணர் இராயலாக பேசுகிறார்கள். எனது உள்ளுணர்வு அவ்வாறு இல்லை, அப்படி நினைக்கவும் இல்லை, ஆனால் அப்படி செய்ய வேண்டியிருக்கிறது. நடத்த வேண்டியிருக்கிறதல்லவா. ஆனால் பிரம்மா பாபாவை பாருங்கள், சாகாரத்தில் இருந்தார் அல்லவா, நிராக்காரை பற்றி சிந்திக்கும் பொழுது சிவபாபா நிராக்காராக இருக்கிறார், மேலும் அவரோ மேலே குதூகலத்துடன் இருக்கிறார், கீழே வந்தால் தான் என்ன நடக்கிறது என்று தெரியும் என்று நினைக்கலாம். ஆனால் பிரம்மா பாபா சாகார ரூபத்தில் உங்களுடன் இருந்தார், மாணவராகவும் இருந்தார், மேலும் சத்தியத்திற்கும், தூய்மைக்கும் எவ்வளவு எதிர்ப்பு வந்த பொழுதும் மிகவும் சாமர்த்தியமாக நடந்தாரா? தூய்மையாகத் தான் இருக்க வேண்டுமென்று நேரடியாக சொல்லாமல், தூய்மையாக இருப்பது நல்லது என்று மெது மெதுவாக தெரிவித்தார். ஆனால் பிரம்மா பாபா பயந்தாரா என்ன? சத்தியத்தின் சக்தியை தாரணை செய்வதில் பொறுமை சக்தி அவசியமாக இருக்கிறது. சகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது, தலை வணங்க வேண்டி யிருக்கிறது, தோல்வியை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அது தோல்வி அல்ல. அந்த நேரத்திற்காக தோல்வியாக தோன்றுகிறது, ஆனால் சதா காலத்திற்கு வெற்றியாகும்.

சத்யத்தன்மையின் சக்தியோடு இன்று டைமண்ட் ஜூப்லி கொண்டாடிக் கொண்டிருக் கிறீர்கள். ஒருவேளை தூய்மை மற்றும் சத்தியத்தன்மை இல்லையென்றால் தற்பொழுது உங்களுடைய முகத்திலும், நடத்தையிலும் தென்படக்கூடிய தெய்வீக அனுபவமானது ஏற்படாது. காலாட்படையாக இருந்தாலும் சரி, நம்பர்வாராக இருக்கிறதல்லவா. மகாரதிகளும் கூட இருக் கிறார்கள். பெயரளவில் மகாரதியாக இருப்பதில்லை, ஆனால் யார் உண்மையான மகாரதி என்றால் அதாவது சத்தியத்தின் சக்தியின் மூலம் நடக்கக்கூடிய மகாரதிகள். யார் பிரச்சனைகளை பார்த்து சத்தியத் தன்மையிலிருந்து சிறிதளவு விலகிவிடுகிறார்கள், ஒன்றிரண்டு வார்த்தைகள் அப்படி பேசினேன், வேறு எதுவும் செய்யவில்லை என்று சொல்கிறார்கள், மனதிலிருந்து பேச வில்லை, வெளியில் சற்று பேசிவிட்டேன் என்றால் இது

முழுமையான சத்தியத்தன்மை கிடையாது. சத்தியற்கு பின்னால் ஒருவேளை பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என்றால் அது பொறுத்துக் கொள்வது கிடையாது. நாம் வெளிதோற்றத்தில் பொறுத்துக் கொள்வது போன்று இருந்தாலும் உங்களுடைய கணக்கில் அது பொறுத்துக் கொள்ளும் சக்தி ரூபத்தில் சேமிப்பு ஆகிவிடும். இல்லையென்றால் என்ன நடக்கிறது என்றால், ஒருவேளை பொறுத்துக் கொள்வதில் பலவீனம் வருகிறது என்றால் அதை அசத்தியத்தின் ஆதரவை அவசியம் பெற வேண்டி யிருக்கிறது எனவே அந்த நேரத்தில் எப்படியோ ஆதரவு கிடைத்துவிட்டது, சரியாகிவிடும், என்று தோன்றும், ஆனால் அவர்களுடைய கணக்கில் பொறுத்துக் கொள்ளும் சக்தி சேமிப்பு ஆகாது. எனவே நாம் நன்றாக நடந்துக் கொள்கிறோம், நாம் மிகவும் சாமர்த்தியமாக நடந்துக் கொள்ள தெரிந்துக் கொண்டோம் என்று வெளிதோற்றத்தில் புரிந்து கொள்கிறார்கள். ஆனால் ஒருவேளை தனது கணக்கை பார்த்தார்கள் என்றால் சேமிப்பு கணக்கு மிகவும் குறைவாகத் தான் இருக்கும். ஆகையால் சாமார்த்தியமாக நடந்து கொள்ள வேண்டாம், ஒருவர் மற்றவரை பார்த்து கற்றுக் கொள்கிறார்கள், இவர்கள் இப்படி நடந்துக் கொள்வதினால் தான் இவர்களுக்கு நல்ல பெயர் கிடைக்கிறது, இவர்கள் மிகவும் முன்னேறிவிட்டார்கள், ஆனால் நாம் உண்மையாக நடந்துக் கொள்கிறோம், அதனால் தான் பின்தங்கியிருக்கிறோம். ஆனால் அப்படியிருப்பது பின் தங்கி யிருப்பது கிடையாது, அவர்கள் தான் முன்னேறிக் கொண்டேயிருக்கிறார்கள். பாபாவிற்கு முன்னால் முன்னேறிக் கொண்டே இருக்கிறீர்கள், மேலும் மற்றவர்களுக்கு முன்பு தான் பின் தங்கியிருப்பவரை போன்று தோன்றுகிறது. ஆனால் யாருக்கு மதிப்பு அதிகம். பாபாவிடமா அல்லது ஆத்மாக்களிடமா? (பாபாவிடம்) எனவே பாபாவின்மனதில் முன்னேறுவது என்றாலே முழு கல்பத்தின் பிராப்தியில் முன்னேறுவதாகும். ஒருவேளை இங்கே முன்னேறுவதில் ஆத்மாக்களிடமிருந்து கற்றுக் கொள்கிறோம் என்றால் அந்த நேரத்திற்கு மட்டும் உங்களுடைய பெயர் இருக்கும், கௌரவம் கிடைக்கும், சொற்பொழிவு பேசுபவர்களின் பட்டியலில் வருகிறீர்கள், சென்டரை பராமரிக்கும் பெயரிலும் வருகிறீர்கள். ஆனால் முழு கல்பத்தில் பாக்கியத்தின் பட்டியலில் வருவதில்லை, இவர்களை தான் பாப்தாதா சொல்கிறார் முயற்சியின், விதையை போடுகிறோம், மரம் பெரியதாக வளர்கிறது, பழமும் கிடைக்கிறது, ஆனால் பழுக்காத பழத்தை சாப்பிட்டு விட்டோம், நெடுங்காலத்திற்காக பாக்கியத்தின் பலன் முடிந்து போய்விடுகிறது. எனவே குறுகிய காலத்தின் பெயர், புகழ், கௌரவத்தை கற்றுக் கொள்ளாதீர்கள். இங்கு பெயர் இல்லை, ஆனால் பாபாவின் இதயத்தில் நம்பர் முன்னால் பெயர் வந்துவிடுகிறது. ஆகையால் டைமண்ட் ஆகவேண்டுமென்றால் இவை அனைத்தையும் சோதனை செய்யுங்கள். சிறிதளவு கூட இராயல் ரூபத்தின் கறை டைமண்டில் மறைந்திருக்க வில்லை தானே? எனவே சத்யத்தன்மையின் சக்தியின் மூலம் தெய்வீகத்தன்மையை தாரணை செய்யுங்கள். எதை வேண்டுமானாலும் சகித்துக் கொள்ள வேண்டியிருக்கும், ஆனால் பயப்படாதீர்கள். உண்மை தகுந்த நேரத்தில் நிரூபணம் ஆகிவிடும். சத்யத்தின் படகு ஆடும் அசையும், ஆனால் மூழ்காது என்று சொல்கிறீர்கள் அல்லவா. நாம் விடுபட்டு போவது இல்லை தானே? பயமற்றவராக இருங்கள். ஒருவேளை எங்காவது எதிர்நோக்க வேண்டியிருந்தால் பிரம்மா பாபாவின் வாழ்க்கையை முன்னால் வையுங்கள். பிரம்மாவிற்கு முன்னால் உலகத்தின் சூழ்நிலைகளும் இருந்தது, பல குழந்தைகளின் பிரச்சனை களும் இருந்தது, ஆனால் குழுவில்

இருந்து பொறுப்புகளும் இருந்தது, சத்தியத்தின் சக்தியினால் வெற்றி அடைந்தார்கள். குழந்தைகளின் சண்டை சச்சரவுகளை பார்க்காமல் இருந்தாரா என்ன? பிரம்மாவிற்கு முன்னால் கூட விதவிதமான சம்ஸ்காரங்கள் உடைய ஆத்மாக்கள் இருந்தார்கள், ஆனால் இத்தனை விதவிதமான சூழ்நிலைகள் இருந்தாலும் கூட சத்தியத்தன்மையின் மூலம் சுயத்தின் மனநிலையை சம்பூரணமாக்கிவிட்டார்.

எனவே நீங்கள் என்ன ஆகவேண்டும்? தந்திரசாலியாக இல்லை தானே? மிகவும் நன்றாக பேசுகிறார்கள் - நான் ஒன்றும் செய்யவில்லை, கொஞ்சம் சாதுர்யமாக நடக்க வேண்டியிருக்கிறது. ஆனால் எதுவரை? எனவே பொறுமை சக்தியை தாரணை செய்து அசத்தியத்தை எதிர்கொள்ளுங் கள். அதனுடைய தாக்கத்தில் வராதீர்கள். நாங்கள் மகாரதிகளையும் இப்படித் தான் பார்த்திருக் கிறோம் அல்லவா, மகாரதிகளை தான் பின்பற்ற வேண்டுமல்லவா. இப்பொழுது பிரம்மா பாபா அருகாமையில் இல்லை, மகாரதிகள் தான் இருக்கிறார்கள், அதனால் அவர்களை பின்பற்றுகிறோம், என்று பலர் இவ்வாறு புரிந்துள்ளார்கள். ஆனால் ஒருவேளை மகாரதிகளும் கூட கலப்படம் செய்கிறார்கள், சாதுர்யமாக நடந்துக் கொள்கிறார்கள் என்றால் அந்த நேரத்தில் அவர்கள் மகாரதிகளே கிடையாது. அந்த நேரத்தில் கிரகசாரத்தில் (இராகுவின் பிடியில்) இருக்கிறார்கள், மகாரதிகளாக அல்ல. ஆகையால்- பாபாவை பின்பற்றுங்கள், சகோதர, சகோதரிகளை அல்ல என்று தான் பாபாவின் சுலோகன் இருக்கிறது அல்லவா? எனவே சாகாரத்தில் செயலாற்றும் பொழுது பிரம்மா பாபாவை முன்னால் வைத்து பின்பற்றுங்கள். அசரீரி ஆவதில் நிராகார பாபாவை பின்பற்றுங்கள். நல்ல நல்ல குழந்தைகளாக இருந்தாலும் சரி, அவர்களும் பிரம்மா பாபாவை பின்பற்றுகிறார்கள். எனவே நீங்கள் என்ன செய்ய வேண்டும்? தந்தையை பின்பற்றுங்கள். உறுதியாக உள்ளீர்களா? அல்லது கொஞ்சம் ஏதாவது வாய்ப்பு கிடைக்கிறது என்றால் எடுத்துக் கொள்ளலாம், பிறகு எதிர்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம்? சத்யுகத்தில் குறைந்த பதவி கிடைக்க போகிறது அவ்வளவு தானே, ஆனால் சுகமாகத்த தான் இருக்க போகிறோம் அல்லவா என்று நினைத்துக் கொள்கிறார்கள். துக்கம் என்பது இல்லை. அனைத்து பிராப்திகளும் இருக்கும். பிரஜைகளுக்கும் பிரஜைகளாக இருந்தாலும் கூட இல்லை என்று எதுவும் இருக்காது அல்லவா, எனவே மகிழ்ச்சியாக இருந்துக் கொள்ளலாம். பிறகு பார்த்துக் கொள்ளலாம். ஆனால் இந்த குறுகியகாலத்தின் மகிழ்ச்சி என்பது தண்டனைக்கான பங்காக மாறிவிடும். அதற்கு சம்மதமா, சிறிதளவு தண்டனை பெறபோகிறோம். அதைக் கூட மகிழ்ச்சியாக எடுத்துக் கொள்ளலாம். இல்லை.

எனவே மூன்று விஷயங்களை நினைவில் வையுங்கள் - தூய்மை, சத்தியத்தன்மை மற்றும் தெய்வீகத் தன்மை. அப்படி சாதாரணமான வார்த்தைகள் அல்ல, சாதாரணமான எண்ணங்களும் அல்ல, சாதாரணமான செயலும் அல்ல, தெய்வீகத்தன்மை நிறைந்தாக இருக்க வேண்டும். தெய்வீகத்தன்மையின் பொருளே தெய்வீக குணங்களின் மூலம் செயலை செய்வது, எண்ணங்களை உருவாக்குவது, அது தெய்வீகத்தன்மையாகும். பாவ செயல் செய்கிறோமா என்ன என்று உலகத்தினர் கேட்கிறார்கள் அல்லவா? எனவே எந்த விகாரத்திற்கு உட்பட்டு செய்யப்படும் செயல் அனைத்து பாவச் செயல் என்று நீங்கள் சொல்கிறீர்கள் அல்லவா. அப்படி புரிந்துள்ளீர்கள்

அல்லவா. எனவே தெய்வீகத்தன்மை என்றால் தெய்வீக குணத்தின் ஆதாரத்தில் மனம், சொல் மற்றும் செயல் செய்வது. எனவே சத்தியத்தின் மகத்துவத்தை தெரிந்துக் கொள்வதாகும்.

ஒரு நொடியில் தன்னை அசரீரியாக மாற்ற முடியுமா? ஏன்? நான் அசரீரி ஆத்மா என்ற எண்ணத்தை உருவாக்குகிறேன் என்றால் எவ்வளவு நேரம் ஆகிறது? ஒரு நொடி தான் தேவைப்படு கிறதல்லவா. எனவே நொடியில் அசரீரி ஆவது, விடுப்பட்டவராகவும், பாபாவிற்கு அன்பான வராகவும் இருப்பது - இந்த டிரிலை முழு நாளும் இடை இடையில் செய்துக் கொண்டே இருங்கள். செய்ய வருகிறதல்லவா? எனவே இப்பொழுது அனைவரும் ஒரு நொடியில் அனைத்தையும் மறந்து ஒரே அடியாக ஆசரீரியாக மாறிவிடுங்கள். (பாப்தாதா 5 நிமிடம் டிரில் செய்ய வைத்தார்). நல்லது.

நாலா பக்கத்திலுமுள்ள அனைத்து தூய்மையின் அஸ்திவாரத்தை உறுதியாக வைக்கக் கூடிய சதா சத்தியத்தின் சக்தி மூலம் உலகத்திலும் கூட சத்தியமான யுகம் அதாவது சத்தியத்தின் சக்தியின் வைப்ரேஷனை பரப்பக்கூடிய சதா ஒவ்வொரு நேரம் மனம், வார்த்தை செயல் மூன்றிலும் தெய்வீகத் தன்மையை தாரணை செய்யக்கூடிய, சதா தந்தையை பின்பற்றுவதில் இயல்பான பயிற்சி செய்யக்கூடிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

இந்த டிரில்லை தினந்தோறும் எந்தளவு அதிகமாக செய்ய முடியுமோ, அந்தளவு செய்துக் கொண்டே இருங்கள். ஒரு நிமிடமாக இருந்தாலும் பராவில்லை. மூன்று நிமிடம், இரண்டு நிமிடம் இல்லையென்றாலும் கூட ஒரு நிமிடமாவது, அரை நிமிடமாவது இந்த பயிற்சி செய்வதின் மூலம் கடைசி நேரத்தில் அசரீரி ஆவதில் மிகுந்த உதவி கிடைக்கும். ஆக முடியுமல்லவா? இப்பொழுதே அசரீரி ஆக முடிகிறதா அல்லது யுத்தம் செய்ய வேண்டியுள்ளதா? முயற்சி செய்து செய்து நேரம் ஆகிவிடுகிறதா? நொடியில் ஆகி விடுகிறீர்களா. பல வேலைகள் இருந்தாலும் ஆக முடிகிற தல்லவா? கடினமாக இல்லை தானே? ஐநா சபையில் அதிகம் ஒடோடி செல்கிறீர்கள் மற்றும் அசரீரி ஆவதற்கான முயற்சி செய்யுங்கள், முடியுமா? ஒருவேளை இந்த பயிற்சியை தகுந்த நேரத்தில் செய்தீர்கள் என்றால் அதுவே இயல்பாகிவிடும், சரீர உணர்வில் வருவதற்கு முயற்சி செய்கிறீர்களா என்ன? நான் இன்னாராக இருக்கிறேன் என்பதற்கு முயற்சி செய்கிறீர்களா? இயல்பாக இருக்கிறதல்லவா. எனவே இதுவும் இயல்பாக ஆகிவிட வேண்டும். தேவைப்படும் பொழுது அசரீரி ஆகிவிடுங்கள், தேவைப்படும் பொழுது சரீரத்தில் வாருங்கள். நல்லது. வேலை யாக இருந்தால், இந்த சரீரத்தின் ஆதாரத்தில் வாருங்கள், ஆனால் ஆதாரத்தை பெறக்கூடிய நான் ஆத்மாவாக இருக்கிறேன், அதை மறந்து விடாதீர்கள். செய்பவன் அல்ல, செய்ய வைப்பவன். எப்படி மற்றவர்களை வேலை செய்ய வைக்கிறீர்கள் அல்லவா. அந்த நேரத்தில் தனிப்பட்டவன் என்று புரிந்து கொள்கிறீர்கள். அது போல சரீரத்தில் காரியங்கள் செய்துக் கொண்டிருந்தாலும் கூட செய்ய வைக்கக் கூடிய நான் தனிப்பட்டவன், இந்த பயிற்சியை செய்தால் ஒருபொழுதும் உடல் உணர்வின் விஷயங்களில் கீழே வர மாட்டீர்கள் நல்லது.

வரதானம் : அன்பு கடலில் முழ்கி என்னுடையது என்ற அழுக்கை முடிக்கக்கூடிய தூய்மையான ஆத்மா ஆகுக.

யார் சதா அன்பு கடலில் முழ்கியிருக்கிறார்களோ, அவர்களை உலகத்தின் எந்தவொரு விஷயமும் உணர்வில் இருக்காது. அன்பில் முழ்கியிருக்கக் கூடிய காரணத்தினால் அனைத்து விஷயங்களிலிருந்தும் தானாகவே கடந்து சென்று விடுவார்கள். இவர்கள் எப்பொழுதும் முழ்கியிருக்கிறார் என்று பக்தர்களை பார்த்து சொல்கிறார்கள், ஆனால் குழந்தைகள் சதா அன்பில் முழ்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு உலகத்தின் நினைவு, என்னுடையது, என்னுடையது என்ற அனைத்தும் முடிந்துவிடும். பலவிதமான என்னுடையது என்ற அழுக்கு முடிந்துவிடும். ஒரே ஒரு பாபா மட்டும் தான் என்னுடையவர் என்றால் அழுக்குத்தன்மை முடிந்துவிடும். ஆத்மாவும் தூய்மையாகிவிடும்.

சுலோகன்: புத்தியில் ஞான இரத்தினங்களை உள்வாங்கி கொள்ள வேண்டும், மற்றவர்களையும் உள்வாங்க செய்ய வைப்பது தான் அன்ன பறவை ஆக வேண்டும்.